பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

17 SEP 1996
தேசிய ஆவணங்கள் மையம்
யாழ்ப்பாணம்

உதயன்

விலை ரூபா 6 00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 31 திங்கட்கிழமை (16-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 212

தென்மராட்சியில் 5 படையினர் பலி!

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சாவகச்சேரிக்கும், கொடிகாமத்துக்கும் இடையில் உள்ள இராணுவ பாதுகாப்பு நிலைகளுக்குள் புலிகள் ஊடுருவ முயற்சி செய்ததாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

ஊடுருவல் செய்த விடுதலைப் புலிகளைப் படையினர் தாக்கியதை அடுத்து ஏற்பட்ட சண்டையில் 5 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

முகமாலையில் இராணுவக் காவலரண் தொடர் ஒன்று சனிக்கிழமை அதிகாலை புலிகளால் தகர்க்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

கடற்படை - கடற்புலிகள் திருமலையில் மோதல்!

கொழும்பு, செப். 16

திருகோணமலைத் துறைமுகத்துக்கு வடக்கே உள்ள கடற்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடற்படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இரு கடற்படையினர் கொல்லப்பட்டனர்; ஆறு கடற் படையினர் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

திருகோணமலை "போல் பொயின்ற்" பகுதியில் இருந்து வடக்கு நோக்கிச் சென்ற விடுதலைப் புலிகளின் கண்ணாடியிழைப் படகுகளை அபகரித்த கடற்படையினர் அவற்றைத் துரத்தி அழித்ததாகவும் —

அப்படகுகள் புல்மோட்டைக்கும் குச்சவெளிக்கும் இடையில் மறைவதற்கு முன்னர் இந்தப் படகுகள் பெருமளவில் சேதம் அடைந்திருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் —

இச் சம்பவத்தில் இரு கடற்படையினர் கொல்லப்பட, மேலும் ஆறு கடற்படையினர் காயமடைந்ததாகவும் —

கடற்படைப் படகு ஒன்று சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

புலிகள் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (உ-3)

மூன்றில் இரு பங்கு யுத்தம் முடிவுற்றுவிட்டது!

ஜனாதிபதி கூறுகின்றார்

கொழும்பு, செப். 16

"வடக்கு-கிழக்கில் கடந்த 12 வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். யுத்தத்தில் மூன்றில் இரண்டு பகுதி இப்போது முடிவடைந்துவிட்டது. மீதி யுத்தமும் விரைவில் முடிவடைந்துவிடும்."

—இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அத்தனகலைத் தொகுதியில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் சமாதானத்தை முற்றாக எதிர்த்து வருகிறார்கள். எனவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன." — என்றும் அங்கு அவர் கூறினார். (உ-3)

கிளிநொச்சி மாவட்டத்தில் தபாற் சேவை ஆரம்பம்

வாரத்தில் 3 நாள்கள் வெளியூருக்கு

யாழ்ப்பாணம், செப். 16

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கிளிநொச்சிக்கும், வெளி மாவட்டங்களுக்குமான தபாற் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

"உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதன் பின்னர் கிளிநொச்சிக்கும், வெளியிடங்களுக்குமான தபாற் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இப்போது ஸ்கந்தபுரத்தில் இயங்கும் கிளிநொச்சி தபால் நிலையத்தில் இருந்து வெளியிடங்களுக்கான தபாற்சேவை வாரத்தில் மூன்று நாள்கள் நடத்தப்படுவதாக அறிய வந்துள்ளது.

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க வாகனத்தைப் பயன்படுத்தியே இச்சேவை நடாத்தப் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

இராணுவத்துக்கு மேலும் 75,000 பேர்!

கிராமசேவை அதிகாரிகள் மூலம் விண்ணப்பப் படிவங்கள் விநியோகம்

கொழும்பு, செப்ரெம்பர் 16

இராணுவத்துக்கு மேலும் எழுபத்தையாயிரம் பேர் சேர்க்கப் படவிருக்கின்றனர்:

இந்த இராணுவ ஆள்திரட்டும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் என இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆள்திரட்டல் நடவடிக்கையின் கீழ் இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் நாடெங்கும் உள்ள — ஏழாயிரத்துக்கும் அதிகமான — கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று இராணுவ ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான பணிப்பாளர் கேணல் என். குணதிலகா தெரிவித்தார்.

மாவட்ட செயலகங்களில் இருந்து இராணுவ ஆள்திரட்டற் பகுதிக்கு கணிசமான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். (உ-3)

யாழ். மக்களின் மனித உரிமைகளை மதிக்கபடையினருக்கு அரசுஉத்தரவு!

கொழும்பு, செப். 16

யாழ். மக்களின் மனித உரிமைகளை மதிக்கும் விடயத்தில் தீவிர கவனம் எடுக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி விடுத்திருக்கும் பணிப்புரைகள் மிகக் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருப்பதாக அரசு சார்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போவது குறித்து மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்த முறைப்பாடு குறித்து பொறுப்பு வாய்ந்த வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டதாகவும் தெரிகின்றது என்று அப்பத்திரிகை குறிப்பிட்டது.

திரு. ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக உண்மை நிலையைக் கண்டறிய உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களை செடி, கொடிகளாக அன்றி இந்த நாட்டு மக்களாகக் கருத வேண்டும் என்று உத்தரவிடப் பட்டிருக்கின்றது.

அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்களேயானால் அது இந்த நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கும் சமாதான வாழ்வுக்கும் குழி பறிப்பதாக அமையும் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3)

மேலும் 208 அகதிகள் தமிழகத்துக்கு!

சென்னை, செப். 16

கடந்த இரு தினங்களில் இலங்கையில் இருந்து 208 அகதிகள் பத்துப் படகுகளில் இராமேஸ்வரம் அருகே வந்து சேர்ந்தனர்.

இவர்கள் [illegible] முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

சுப்பிரமணியசுவாமிக்கு ஜெயலலிதா ஆதரவு!

அரசியலில் திடீர் குத்துக்கரணம்

சென்னை, செப். 16

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தொடர்ந்து தலையிடி, தொல்லைகளைக் கொடுத்து வரும் சுப்பிரமணிய சுவாமியின் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக ஜெயலலிதா அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார். சென்னை மேயர் பதவித்தேர்தலில் சுப்பிரமணிய சுவாமியின் கட்சி வேட்பாளருக்கு ஆதரவர்க தனது கட்சி வேட்பாளரையும் அவர் வாபஸ் பெற்றிருக்கின்றார்.

ஜெயலலிதாவின் இந்தத் திடீர் "பல்டி" அரசியல் வட்டாரங்களில் பேராச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான கருணாநிதி தமது மகனான ஸ்டாலினை சென்னை மேயர் பதவிக்கு தி.மு.க. வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. வேட்பாளராக ஜெயக்குமார் நிறுத்தப்பட்டிருந்தார்.

சுப்பிரமணியசுவாமியின் ஜனதாக் கட்சி முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் கட்சியின் தமிழக மாநிலத் தலைவருமான சந்திரலேகாவை தனது வேட்பாளராக நிறுத்தியிருக்கின்றது.

ஜெயலலிதாவுக்கு எதிராக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தாக்கல் செய்துள்ள முக்கியமான நான்கு வழக்குகள் விசாரணையில் உள்ளன.

அதில் முக்கியமானது ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தின் போது அவ்வேளை ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்த சந்திரலேகா மீது இராவகம் வீசப்பட்ட வழக்காகும்.

நான்கு ஆண்டுகளாக இந்த வழக்கு விசாரணைக்குக் காத்திருக்கின்றது.

சில அரசுசார்பு நிறுவனப் பங்குகளை தனது பெயருக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போரை முடிவுக்கு கொண்டுவந்தாலே தீர்வு தீர்க்கமான கட்டத்துக்கு வரும்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பேட்டி

கொழும்பு, செப். 16

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு வரும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா.

''சண்டே ஐலண்ட்'' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியிலிருந்து சில பகுதிகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பொ. ஐ. மு. அரசு யு.என்.பியின் ஆதரவை எதிர்பார்க்கிறது. வடக்கு, கிழக்கு பிரச்சினை இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டது.

பதில்: தீர்வுயோசனை அரசின் அரசமைப்புச் சீர்திருத்தத்தின் ஒருபகுதிதான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தால் மட்டுமே தீர்வுத்திட்டம் தீர்க்கமானஒரு கட்டத்துக்கு வரும்.

கே: தீர்வுத்திட்டம் விரும்பும் அமைதியைக் கொண்டுவராது என்பதா உங்கள் கருத்து.?

ப: நிச்சயமாகச் சொல்ல முடியாது. அரசமைப்பு சீர்திருத்தம் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையுமா என்று கூறமுடியாது. அரசாங்கமே நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலையிலுள்ளது. புலிகளை இராணுவரீதியில் தோற்கடித்து, தீர்வுத்திட்டத்தை அமுல் நடத்த அரசு விரும்புகிறது. கேள்வி என்னவென்றால் யுத்தத்துக்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பதுதான்.

கே: யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐ.தே.கவுக்கு பொன்னான சந்தர்ப்பம் கிடைத்திருந்த ''வடமராட்சி ஒபரேஷன்'' நடந்தது. இடையில் இலங்கை — இந்திய ஒப்பந்தம் வந்தது. பின்னர் சமாதானத்தை ஏற்படுத்த ஐ.தே.க. அரசினால் முடியாமற் போய்விட்டது. ஐ.தே.கவின் பலவீனமான தலைமைத்துவத்தினால் தான் யுத்தம் தொடர்ந்தது.

ப: ஒப்பந்தத்தை அமுல் நடத்தினோம். இந்தியப் படையை திருப்பி அனுப்பினோம். இந்தியப்படையைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பது ஜே.வி.பியினரின் கோரிக்கைகளில் ஒன்று. இதற்காக பிரேமதாசாவைக் குற்றஞ்சாட்டக் கூடாது.

கே: மாகாணசபை முறையை வரவேற்கிறீர்களா?

ப: மாகாணசபை முறையை அறிமுகப்படுத்தியதை நான் வரவேற்கிறேன். ஆனால் மாகாண சபையின் சாதனை குறித்து எனக்கு மகிழ்ச்சியில்லை. ஐ.தே.க அரசும் இப்போதைய அரசும் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பறித்துக் கொண்டன. இது இரண்டு கட்சி அரசுகளும் விட்ட பிழையாகும்.

(அ-150)

வாவியில் மிதந்த மர்மச் சடலங்கள்: கைதான 22 படையினருக்குப் பிணை

பொல்கொட வாவி, தியவன்ன ஓயா வாவி மற்றும் அளவை நீரோடை ஆகிய நீர் நிலைகளில் மிதந்த சடலங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 22 விசேட அதிரடிப்படையினரையும் பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதிவான் முனிதாஸ நாணயக்கார அனுமதித்தார்.

கொழும்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் கொலைசெய்யப்பட்டு மேற்படி நீர் நிலைகளில் வீசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொண்ட இரகசியப் பொலீஸார் மேற்படி 22 அதிரடிப் படையினரை கைது செய்திருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களை வழக்குத் தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்படுவதால் பிணையில் செல்ல அனுமதிப்பதாக தெரிவித்த நீதிபதி அழைப்பாணை கிடைத்ததும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

(இ-3-10)

ஒருங்கிணைப்புக் குழுவின்

இணைத்தவிசாளராக காமினி பொன்சேகா

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தவிசாளராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்

இக்குழுவின் செயலாளராக இவர் முன்பு நியமிக்கப்பட்டிருந்தார்.

மாகாணசபையின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி இக்குழுவின் செயலாளராக தற்சமயம் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)

இன்று (16-9-96) ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம்

உங்கள் பிரச்சினை தீர்க்க ஏவருமே இல்லை. ஆளில்லாத காரணத்தால் நானே வந்துள்ளேன். தீர்த்துவைத்தான் இருப்பேன் என்று கூறியருளினீரே .....

இன்னும் தாமதம் ஏனோ! கண்ணீர்க் கடலில் முழ்கித் தத்தளிக்கும் எம் மக்களுக்கு இன்றைய பாலாபிஷேகம் இன்பக்கடலாகட்டும்.

(42734)

— சோதியூரான்

I.I.S. INSTITUTE OF INFORMATICS STUDIES

(Jaffna - Sri Lanka) Regd.No.: J/DS/F/BR/408/05

New Batches: Weekday: 30-09-1996 / Weekend: 28-09-1996 — 9.00 A.M.

Computer
★ BASIC ★ PASCAL ★ PROLOG ★ C++
★ dBase III+ ★ LOTUS 123 ★ WORD PERFECT
★ Dip. in Software Technology (Special graduation course)

Electronics
★ Digital Electronics ★ Tele Communication

Short Hand & Type Writing
★ English ★ Tamil

Conduct:- 68, Clock-Tower Road Jaffna.

★ மாணவர்களின் வசதிகருதி எமது கிளை நிலையங்கள் மானிப்பாய்/ நெல்லியடி ஆகிய பகுதிகளில் வெகு விரைவில் சேவையை ஆரம்பிக்க உள்ளன.
★ கணனி கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புகள்.
★ தவணை முறையில் கட்டண வசதி. (42724)

புதுமையான போராட்டம்!

பாண் விலை அதிகரிப்பு நாட்டின் தென்பகுதியில் அரசு ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே புதுமையான போராட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாணும், ரயர்களும் இப்போராட்டத்தில் பிரதான பங்கு வகிக்கின்றன.

எதிரணி ஆதரவாளர்கள் வரிசையாக ரயர்களைத் தொங்கவிட்டு, அவற்றில் பாணை வைக்கின்றனர்.

அரசு ஆதரவாளர்கள் பாண் வைக்கப்பட்டுள்ள ரயர்களுக்கு நெருப்பு வைக்கின்றனர்.

பகிரங்க வீதிகளில் இந்த ஏட்டிக்குப் போட்டிச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மக்கள் வியப்புடன் இவற்றைப் பார்த்துச் செல்கின்றனர்.

குளியாப்பிட்டி, இத்தலாவ மற்றும் பல இடங்களில் அண்மையில் இப்படியான பல சம்பவங்கள் இடம் பெற்றன. (அ-150)

தமிழ்ப் பத்திரிகையாளரை கொல்வதற்கு முயற்சி!

வவுனியாவில் சம்பவம்

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்த் தினசரி ஒன்றின் வவுனியாச் செய்தியாளரை வவுனியாவில் வைத்து கொல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. அவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

வவுனியா நகரில் கடந்த 27 ஆம் திகதி விடுதலைப் புலிகள் ஊடுருவி நடத்திய குண்டுத் தாக்குதலின் பின்னரே இக் கொலை முயற்சி இடம்பெற்றது.

இச் சம்பவம் குறித்து கொழும்பில் இருந்து வெளிவரும் ''தினமுரசு'' வார இதழ் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

இரவோடு இரவாக மோட்டார் சைக்கிளில் ஆயுதங்கள் சகிதம் சென்ற இரு இளைஞர்கள் சம்பந்தப்பட்ட செய்தியாளர் தங்கியிருந்த விடுதியின் கதவைத் தட்டியிருக்கிறார்கள்.

கதவைத் திறந்தவர் ஒரு வயதான பெண்மணி. வன்னி மாவட்ட முன்னால் எம். பி. ஒருவரின் தாயார்தான் அவர்.

அவரைக் குறிப்பிட்ட செய்தியாளரின் மனைவி என நினைத்து '' எங்கே அவர்?'' என்று கேட்டுக்கொண்டே நெஞ்சில் காலால் உதைத்தார் ஓர் இளைஞர்.

இதற்கிடையே வெளியே கேட்ட சத்தங்களை வைத்து நிலைமையை ஊகித்துக்கொண்ட செய்தியாளர் உள்ளே ஓடிப் போய் ஓர் அறைக்குள் பதுங்கிக்கொண்டார்; வந்தவர்களால் தேடிப் பிடிக்க முடியவில்லை. அங்கு கண்ணில் பட்டவர்களை எச்சரித்து விட்டுத் திரும்பிச் சென்று விட்டனர். போகும்போது சந்தியில் நின்று துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துவிட்டுச் சென்றனராம்.

வவுனியாவில் பொலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக போதியவிவரங்களை வெளியிடவில்லை; அதுதான் தேடுகிறோம் என்று வந்தவர்கள் கூறினார்களாம்.

தாம் புலிகள் இயக்கத்தினர் என்று காட்டுவதுபோல அவர்கள் நடந்துகொண்டனராம்.

ஆனாலும் அவர்கள் புலிகள் இயக்கத்தினர் அல்லர் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

இதேவேளை வவுனியாவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்திய புலிகள் இயக்க உறுப்பினர் உட்பட அதில் சம்பந்தப்பட்ட மூவருக்கு புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பரிசுகள் வழங்கிப் பாராட்டியிருப்பதாகத் தெரிகிறது;

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

கொழும்பில் பொலீஸாரிடம் சிக்கி முழித்த அஸாருதீன்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அஸாருதீனுக்கு கொழும்பில் புதுமையான அனுபவம் ஒன்று ஏற்பட்டது. கொழும்பில் உள்ள வீதிச் சோதனை அரண் ஒன்றில் கடமையாற்றும் பொலீஸாரிடம் அஸாருதீன் வகையாக மாட்டிக் கொண்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது:

சிங்கர் கிண்ணப் போட்டிக்காக கொழும்பு வந்திருந்த அஸாருதீன் தனது பல்லுக்கு மருத்துவம் பார்ப்பதற்காக மருத்துவரை நாடி ஒரு புது காரை தானே ஓட்டிச் சென்று கொண்டிருந்த போதுதான் பாதுகாப்பு சோதனை முனையில் நின்ற பொலீஸார் அவரைத் தடுத்து நிறுத்தினர்

அவருடைய அடையாள அட்டை, காரின் இன்சுரன்ஸ் முதலானவற்றைக் காட்டும்படி அஸாரை பொலீஸார் கேட்டனர். ஆனால் அவை எதையும் காண்பிப்பதற்கு அஸாரால் முடியவில்லை.

ஆஜானுபாகுவாக உடை அணிந்து கம்பீரமாக இருந்த அவரை தடையைத் தாண்டிச் செல்ல பொலீஸார் அனுமதிக்கவில்லை. பல் வேதனையில் தவித்த அஸாருதீன் தன்னிடமிருந்த 'செலுலர்' தொலைபேசியை எடுத்து இந்தியில் ஏதோ பேசினார். சில நிமிடங்களில் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் ஒரு காரில் அவ்விடம் வந்து சேர்ந்தார். விடயத்தை விளக்கி அஸாருதீனையும் பொலீஸாருக்கு அறிமுகப்படுத்தினார்.

பொலீஸாருக்கு அஸாருதீனை நேரில் கண்டதும் அடையாளங் காணமுடியவில்லை. தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளில் பிரசுரமாகும் படங்களின் மூலமும் அறிமுகமான அபிமான ஆட்டக்காரரை அந்த இடத்தில் அவர்கள் எவ்வாறு அடையாளம் காணமுடியும்? உண்மை தெரிந்ததும் மன்னிப்புக்கேட்டுக் கொண்டதுடன் அஸாரின் 'ஒட்டோகிராபை' யும் பெற்றுக் கொண்டனராம்.

அஸாருதீன் சென்ற கார் இலங்கை கப்டன் அர்ஜுன ரணதுங்காவினுடையதாகும் (உ)

தெஹிவளையில் வெடித்தது ''நிற்றோ'' ரகக் குண்டு

அதிசக்தி வாய்ந்ததெனத் தெரிவிப்பு

தெஹிவளை ரயில் நிலைய குண்டுவெடிப்பில் 'நிற்றோ' ரகத்தைச் சேர்ந்த சக்தி வாய்ந்த குண்டுகளே வெடித்துள்ளன என அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இக் குண்டுகள் ஒவ்வொன்றும் ஐந்து கிலோ கிராம் எடை கொண்டவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் ரயிலில் மூன்று குண்டுகள் இருந்த போதும் இரு குண்டுகளே வெடித்தன என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காஷ்மீரில் இன்று தேர்தல்; வன்முறைகள் வெடிக்கலாம்

ஸ்ரீநகர், செப். 16

காஷ்மீர் மாநிலத்துக்கான இரண்டாம் கட்ட தேர்தல் இன்று நடைபெறவிருக்கிறது. 34 சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க இன்று நடைபெறும் தேர்தலில் 20 இலட்சம் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாதிகளின் பயமுறுத்தலையும் பொருட்படுத்தாமல் 238 பேர் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் தொடர்பாக அங்கு இடம்பெற்ற வன்முறைகளில் இதுவரை சுமார் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுவரை 20 பேர் பலி

இன்றைய தேர்தலின் போது வன்செயல்கள் இடம் பெறலாம் என்று இந்திய தேர்தல் ஆணையாளர் கில் அதிகாரிகளை எச்சரித்துள்ளார்.

இன்று தேர்தல் நடக்கவிருக்கும் பல தொகுதிகள் தீவிரவாதிகளின் ஊடுருவல் இடம்பெறும் பகுதிகளில் அமைந்துள்ளன என்றும் அவர் கூறினார். (-3)

ஹெலியிலிருந்து கண்ணீர்ப் புகை

தென். கொரியாவில் மாணவர்களின் போராட்டங்களை நசுக்க அரசு மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை எதிர்த்து நடத்தப்பட்ட பேரணியைக் கலைக்க தென் கொரியப் படையினர் ஹெலிகளில் இருந்து கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர்.

தென். கொரியாவும், வட கொரியாவும் இணைக்கப்பட வேண்டும் என்று கோரி கடந்த மாதம் மாணவர்கள் நடத்திய போராட்டத்தையும் தென் கொரிய படையினர் தாக்குதல் மேற்கொண்டு முறியடித்ததும் தெரிந்ததே. (இ-3)

இந்திய- பாகிஸ்தான்:

சமரசம் செய்து வைக்க பலஸ்தீன தலைவர் தயார்

இஸ்லாமாபாத், செப். 16

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ய தாம் தயார் என்று பலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்துக்குவிஜயம் மேற்கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"காஷ்மீர் மக்கள் எங்கள் சகோதரர்கள். அவர்கள் நிம்மதியாக வாழும் நிலை ஏற்படவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

அங்கு அவர் பிரதமர் பெனாசிர் பூட்டோ உட்பட பல தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். (இ-3)

ருவாண்டாவுக்கு எதிரான ஆயுதத் தடை தளர்வு

நியூயோர்க், செப். 16

ருவாண்டாவுக்கு எதிரான ஆயுதத் தடையை ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தளர்த்தியிருக்கிறது.

ஏனைய நாடுகளிடம் இருந்து ருவாண்டா அரசாங்கம் ஆயுதங்களை இனிவாங்க முடியும்.

1994ஆம் ஆண்டு மேமாதம் ருவாண்டாவில் நடந்த உள் நாட்டுச் சண்டையின் காரணமாக பாதுகாப்புச் சபை அந்நாட்டுக்கு எதிராக ஆயுத தடையை விதித்திருந்தது.

அங்குள்ள அரசாங்க சார் பற்ற படைகளுக்கு ஆயுதங்களைவழங்குவதற்கு எதிரான தடை தொடர்ந்து இருக்கும் என்று பாதுகாப்புச்சபை மேலும் தெரிவித்தது. (-3)

செங்கோட்டையனைக் கைது செய்ய தமிழ்நாடு போலீஸார் வலைவீச்சு!

இரண்டு தடவை தப்பினார்

தமிழக முன்னாள் போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் மீது பொலீஸார் ஊழல் வழக்கு தாக்கல் செய்துள்ளதை அடுத்து அவரைக் கைது செய்ய பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

அவரைக் கைது செய்ய பொலீஸார் இரு தடவைகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாக கூறப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி சென்னை ராயப் பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமையகத்துக்கு செங்கோட்டையன் வந்துள்ளார் என அறிந்த பொலீஸார் அப்பகுதியை சுற்றி வளைத்தனர். இதையறிந்த செங்கோட்டையன் முன்னாள் அமைச்சரும் கட்சியின் மூத்த துணைப் பொதுச் செயலாளருமான திருநாவுக்கரசுவின் காரில் ஏறித் தப்பிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதன் பின்னர் அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா அ. தி. மு. க தலைமைக்கழகத்துக்கு வந்தார். அப்போதும் செங்கோட்டையன் அங்கு வந்தார்.

மீண்டும் பொலீஸார் அக்காரியாலயத்தை சுற்றி வளைத்தனர்.

இதைக் கேள்விப்பட்ட ஜெயலலிதா செங்கோட்டையனை பாதுகாக்க ஒரு திட்டம் வகுத்ததாகக் கூறப்படுகின்றது.

இரவு 10-30 மணிக்கு அவர் தனது காரில் புறப்பட்டார். அவருடைய காருக்கு முன்னே பாதுகாப்பு ஜீப் சென்றது. அதில் செங்கோட்டையன் ஏறி தப்பிச் சென்றார்.

ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்து இல்லத்தில் பின்னர் செங்கோட்டையன் பதுங்கிக் கொண்டதாகக் கருதப்படுகின்றது.

தற்போது அவரைக் கைது செய்ய பொலீஸார் வலை விரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

ரஷ்ய தலைமைப் பீட லடாய் அதிகரிப்பு

ரஷ்ய பிரதமர் விக்டர் சொர்னமில் சமரிப்பித்த நிதி அறிக்கையை பாதுகாப்புச் சபை தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தற்சமயம் சிகிச்சைக்காக மறைவிடம் ஒன்றில் தங்கியுள்ள ரஷ்ய அதிபர் யெல்ட்சினுக்கும் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். (இ-3)

மோதலை முடிவுக்குக் கொண்டுவர 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

அமெரிக்கத் தூதரிடம் தமிழ்க்கட்சிகள் வற்புறுத்து

ஈராக் மீதான தாக்குதல் குறித்து நாட்டு மக்களுக்கு வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்திலிருந்து உரையாற்ற ஜனாதிபதி கிளின்ரன் தயாராகிக் கொண்டிருந்த அன்று (செவ்வாய் 3-9-1996) பகல்.....

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் பீற்றர் பேர்லி (Peter Burleigh) இனப்பிரச்சினை பற்றிய தகவல்களை கொழும்பிலுள்ள தமிழ் அமைப்புக்களின் தலைவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு ஹோட்டன் பிளேசில் உள்ள அவரது 'ஜெபர்ஸன் ஹவுஸ்' இல்லத்தில் இடம் பெற்றது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ. பி. ஆர் எல். எவ்), சங்கர் ராஜி (ஈரோஸ்), ஸ்ரீகாந்தா (டெலோ), டக்ளஸ் தேவானந்தா (ஈ. பி. டி. பி), த. சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இரண்டரை மணித்தியாலங்கள் இச் சந்திப்பு நீடித்தது. குளிர்பானத்துடன் ஆரம்பமான இச் சந்திப்பு மீன், கரட் கறி வகைகளுடன் மதியச் சாப்பாடு வரை தொடர்ந்தது. டக்ளஸ் தேவானந்தா சாப்பாட்டுக்குப் பின்னரான பழவகை உண்டி அருந்தும் வரை இருக்கவில்லை. அதற்கு முன்பாகச் சென்றுவிட்டார்.

யுத்த நிறுத்தம்

படையினருக்கும் புலிகளுக்கும் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றி தனது கருத்துக்களைத் தெளிவாக அமெரிக்கத் தூதரிடம் கூறிவிட்டே டக்ளஸ் சென்றார்.

நிரந்தர யுத்த நிறுத்தம் கொண்டு வருவதற்குத் தான் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதாக தேவானந்தா கூறினார்.

ஆனால் சந்திப்பில் கலந்து கொண்ட ஏனைய கட்சிகள் யுத்த நிறுத்தம் தேவை என்று கூறின இந்த உத்தேச யுத்த நிறுத்தம் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் எந்தப் பேச்சுக்கும் முன்னோடியாக இருக்க வேண்டும் என அவை கூறின. இன மோதலை முடிவுக்குக் கொண்டுவர மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தேவை என தமிழ்க் கட்சிகள் ஏகோபித்த குரலில் கூறின.

நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தவிர்க்க முடியாது என்றும் அவை கூறின. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்கள் யாராக இருப்பினும் அவர்கள் புலிகள், தமிழ்க் கட்சிகள், அரசாங்கம், ஐ. நா, ஐ. தே. க ஆகியவற்றுடன் பேச தெரிவித்தார். அவருடன்,

பல கருத்துக்களில் உடன்பாடு

விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு மாற்றுத் திட்டத்தை ஏற்பார்களா என்றும் தூதர் கேட்டார். தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த பெரும்பாலான அபிப்பிராயங்களுடன் தாம் உடன்படுவதாக அவர் சொன்னார்.

புலிகள் சம்பந்தப்பட்ட மட்டில் சில விஷயங்களில் தாம் வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அவருடன், தூதரக அரசியல் அதிகாரி ஸ்கொட் பெலிலி, பாதுகாப்பு — இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் மைக்கேல் பூர் ஆகியோர் இருந்தனர்.

வடக்கு — கிழக்கில் மக்கள் படும் துன்பம், கிளி நொச்சிச் சண்டை காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை, உணவு விநியோகம் ஆகியனவும் சந்திப்பின் போது ஆராயப்பட்டன.

அண்மைக் காலங்களில் கொழும்பில் முன்பு அமெரிக்கத் தூதராகப் பணியாற்றிய வர்களிலும் பார்க்க தற்போதைய தூதர் இனப்பிரச்சினை குறித்து கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றார்.

திருமதி தெரசிற்றா ஷாபர் அமெரிக்கத் தூதராக இருந்த போது ஐ. தே. க. ஆட்சிக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உருவான இராணுவ ஒத்துழைப்பு, பீற்றர் பேர்லியின் பதவிக் காலத்தில் முழுமையாக பலனளிக்க ஆரம்பித்திருக்கிறது.

உறவில் புதிய பரிமாணம்

அமெரிக்காவின் நவீன விசேட படை "கிறீன் பெரட்ஸ்" (Green Berets) என்பது ஹவாயில் உள்ள அமெரிக்க பசுபிக் தளத்தில் இருந்து இப் படையின் பிரிவு ஒன்று இலங்கை வந்தது. இலங்கை இராணுவத்துக்கு வீரவிலவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

> "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளின் தமிழாக்கம் இது.

பணம் சேகரித்த இருவர் கைது

கொழும்பு, செப். 16

விடுதலைப் புலிகளுக்கு எனக் கூறி பணம் சேகரித்த இருவரை சந்தேகத்தின் பேரில் சிலாபப் பொலீசார் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

புத்தளம் வீதியில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு அண்மையில் வைத்து கைது செய்யப்பட்ட இவ்விருவரும் கொழும்பில் உள்ள விசேட பொலீஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

கொழும்பில் வீதிச் சோதனை கெடுபிடி

கொழும்பு, செப். 16

கொழும்பில் வீதிச் சோதனைகளின் போது ஆள் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கும் பாதுகாப்புப் படையினர் வதிவிடபொலீஸ் பதிவு படிவத்தையும் கேட்கின்றனராம்.

இதனால் 'லொட்ஜ்'களில் தங்கியிருப்பவர்கள் பலவித சிரமங்களை எதிர்நோக்குவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-3)

கொழும்பில் இந்தியப் பிரஜை ஒருவர் கைது

கொழும்பு, செப். 16

வெள்ளவத்தை பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இந்தியப்பிரஜை ஒருவரை கைது செய்தனர்.

சந்தேகத்துக்குரிய முறையில் இவர் வெள்ளவத்தையில் நடமாடியதாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MB-05 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: "மாற்றம் பணிமனை", கலாமண்டப முன் ஒழுங்கை, சட்டநாதர் வீதி, நல்லூர். (42728)

B.M C வாகன இயந்திரம், றிம், வில்லுத்தகடு, உதிரிப் பாகங்கள், L.D வாகன இயந்திரம், L.D வாகன உதிரிப் பாகங்கள், பாரிய கொள் கலன்கள் ஆகியன விற்பனைக்கு உண்டு. மில்க்வைற். (சி/ 2887)

புலமைப் பரிசில் (97)

ஆண்டு 4 கற்கும் மாணவர்களுக்கு 1997 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புக்கள் 15-9-96 இல் ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு ஞாயிறும் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். அஸ்ரன் கல்வி நிலையம், 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப் பாணம். (42716)

தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை. (42680)

அனுமதிப் பரீட்சை

ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) பிரதி ஞாயிறும் எம்மால் வெளிவிடப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42730)

மணமகன் தேவை

உயர் குடும்பத்தைச் சேர்ந்த இந்துசமய 31 வயது டைய ஆசிரியைக்கு சைவ போசனம் உடைய குடும்பத் தில் மணமகன் தேவை. நட் சத்திரம் உத்தரம் (1) பாவம் 35 உண்டு. (செவ்வாய் குற் றம் இல்லை) தொடர்பு: மே/பா இல: 525. உதயன் பணிமனை (42674)

மணமகள் தேவை

இங்கிலாந்தில் நிரந்தரக் குடியுரிமை பெற்று பொறியியலாளர் (இஞ்சினியர்) தகைமையுடன் தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் 29 வயதுடைய யாழ். இந்து உயர்குல மணமகனுக்கு படித்த ஆங்கில அறிவுடைய மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். நட்சத்திரம் பூரம் 3ம் பாதம். இலங்கை வந்து திருமணம் செய்து கூட்டிச் செல்வார். மே/ பா இல: 526, உதயன் பணிமனை. (42725)

தவறிவிட்டது

70ஸ்ரீ 6612 இல: வாகன உறுதிப் பத்திரம், பேர்ஸ் ஆகியன ஆஸ்பத்திரி வீதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர் வே. தேவராசா, சடுவில் ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (42706)

யசோதா திருநாவுக்கரசு என்பவரின் மெய்யியல் (Philosophy) B. A நோட்ஸ் கொப்பியாழ். நகரில் தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். 55, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (42727)

புலமைப் பரிசில், 96

அரசாங்கத்தால் நடத்தப் பட்ட ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள் (விடைகளுடன்) எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42729)

நீண்டகால அரசியல் கைதிகளை விடுவிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

நீண்டகாலமாக சிறையில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப் பளித்து அவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகாவை ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணித் தலைவர் ஆரிய புலேகொட கேட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் நேரில் நடத்திய சந்திப்பு ஒன்றின் போது புலேகொட இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இச்சந்திப்பு 1½ மணித்தியாலம் நீடித்தது. பேச்சுக்கள் சுமுகமான முறையில் இடம்பெற்றன என்று புலேகொட கூறினார்.

எதிர்வரும் பண்டார நாயக்கா நினைவு தினத்தன்று (26-9-1996) இந்த அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி அவர் ஜனாதிபதியிடம் கோரினார்.

இலங்கைக் கடற்படையினரின் பராமரிப்பில் திருமலைக் கடற்படைத்தளத்தில் வைக்கப்பட்டுள்ள விஜேவீராவின் மனைவி, பிள்ளைகளை அவர்கள் விரும்பினால் சுதந்திரமாக வெளியே சென்று வாழ அரசு அனுமதிக்கும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா புலேகொடவிடம் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது. (அ-150)

வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள் வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கழிவு, கருவழிதல், மகப்பேற்றின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி

சி. இராசரத்தினம்,

121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (42700)

மோதலை முடிவுக்கு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இப் பிரிவு பயிற்சி வழங்கியது. அமெரிக்க இராணுவத்தின் அதிகாரிகளின் ஒரு பிரிவு அனுராதபுரத்தில் வைத்து இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளித்தது. அமெரிக்காவின் இவ் விரண்டு படைப் பிரிவுகளும் தங்களின் பயிற்சியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பின.

அமெரிக்க – இலங்கை இராணுவ உறவில் புதிய பரிமாணம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டுப் பத்திரிகைகள் அறிவித்தன. இது அமெரிக்க அதிகாரிகளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது. இலங்கையுடனான அமெரிக்க உறவில் இது பெரிய "பாய்ச்சல்" அல்ல என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர். என்றாலும், உலக பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையின் விஸ்தரிப்பு இது என்று அவர்கள் தெரிவித்தனர்.

எப்படியிருப்பினும் இலங்கைக்கான அமெரிக்க உதவியில் நிச்சயம் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அமெரிக்காவின் இராணுவ உதவி, அமெரிக்காவிலுள்ள இராணுவக் கல்லூரிகளில் இலங்கைப் படையினருக்கு உதவி அளிப்பதுடன் நின்றது. ஆனால் இப்போது அமெரிக்க இராணுவ அதிகாரிகள் முதல் தடவையாக இலங்கை மண்ணில் வைத்து இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கின்றனர். இதனால் இலங்கை இராணுவத்தினரின் திறமை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்க் குழுக்களுடனான அமெரிக்கத் தூதரின் சந்திப்பில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் பிரச்சினையும் விவாதிக்கப்பட்டது. புலிகள் தடைசெய்யப்பட்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை அரசு தொடர்கின்றது என தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். ★

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 26 — 08 — 1941

உதிர்வு: 09 — 09 — 1994

அமரர்

Dr. கந்தவனம் வேலாயுதம்பிள்ளை

அன்பே உருவான வடிவத்திலே
சாத்தியமெனத்தக்க கருணையே உருவான
சிற்பமென நீங்கள் எம்முடன் இருக்கும்
அக்கால கட்டத்தில்;
அந்தக் காலனவன் உங்களை எம்மிடமிருந்து
பிரித்து சென்றதும் ஏனோ?
காலங்கள் இரண்டானாலும் உங்கள்
நினைவுகளை
எம்மால் மறக்க முடியவில்லை

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

நறுவிலியடி,
பொலிகண்டி. (42703)

யாழ் (வெஸ்கோ) மருந்தகம்

மந்திகை

வடமராட்சி மக்களின் வசதி கருதி எமது கிளை நிறுவனத்தை இன்றிலிருந்து ஆரம்பித்துள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

(சி-2889)

புதிய அலுவலகம்

எனது அலுவலகம் தற்போது எழுதுமட்டுவாழ் கண்டி வீதியில் உள்ள ஐயாத்தம்பியின் இல்லத்தில் இயங்குகிறது என்பதை கட்சிக்காரர்களுக்கு அறியத் தருகிறேன். காரியாலய நேரம் புதன்கிழமைகளில் காலை 9.00–1.00 மணிவரை.

த. வேலாயுதம்
சட்டத்தரணி

(சி/2888)

நினைவஞ்சலிகள்

முதலாம் ஆண்டு

திரு. தம்பாபிள்ளை தங்கராசா

(இளைப்பாறிய பிரபல ஆங்கில - புவியியல் ஆசிரியர்)

பிறப்பு: 1909 – 11 – 26
இறப்பு: 1995 – 08 – 29

12 ஆம் ஆண்டு

திருமதி ஞானாபரணம் தங்கராசா

(இளைப்பாறிய ஆசிரியை)

பிறப்பு: 1909 – 12 – 11
இறப்பு: 1984 – 09 – 12

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமகன், பேரப்பிள்ளை.

"கமலை"
மானிப்பாய் வீதி,
உடுவில், சுன்னாகம். (42702)

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்"
– சங். 126: 3

2ஆம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும்

"மேசியா நகை மாடம்"

விசுவாசிகள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் வரவேற்கிறது.

இங்கனம்:

மேசியா நகை மாடம்

111C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(42695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தவறான ஒழுங்கு

★ இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை விரைவுபடுத்த வேண்டுமானால் அரசாங்கத்தின் மீதும் எதிர்க்கட்சிகள் மீதும் அழுத்தம் போடவேண்டும்.

★ இத்தகைய அழுத்தத்தைப் போடுவதற்கு தமிழ் - சிங்கள சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கொழும்பில் நடைபெற்ற சிங்களப் புத்திஜீவிகள் - தமிழ்க் கட்சிகளின் சந்திப்பின் போது — கலந்துரையாடலின் போது — இந்த இரண்டு முக்கிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதில் உள்ள தடங்கலுக்கும், கருத்து ஒற்றுமை காணப்படாதிருப்பதற்கும் முக்கிய காரணம் அரசாங்க கட்சியும், எதிர்க்கட்சிகளும் எதிரும் புதிருமாக இயங்குவதே.

இது இன்று நேற்று உண்டான வியாதி அல்ல. நாற்பது வருட காலத்து வியாதி. தமது உரிமைகளுக்காகப் போராடும் தமிழர்களுக்கு எதனை வழங்கலாம் என்பதில் தென்னிலங்கையில் அரசகட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் எப்போதுமே கருத்து ஒற்றுமை உண்டாவதில்லை. அது இன்று வரை முயற்கொம்பாகவே இருந்து வருகிறது.

ஆட்சியில் உள்ள கட்சி, தமிழர்களுக்குச் சிறிதளவு உரிமைகளை வழங்கப்போவதாகக் கூறியதும், அப்போதைய எதிர்க்கட்சி அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது மட்டுமன்றி —

அரசு நாட்டைத் தமிழர்களுக்கு விற்கப் போகிறது என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்து, சிங்கள மக்களுக்கு இனவாத உணர்வை ஊட்டி, அவர்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிடுவது தான் இதுவரை சிங்கள எதிர்க்கட்சியாளரின் ''ஒழுங்கு முறையாக'' இருந்தது.

இப்போதும் அதே நிலை தான்.

தமிழர்களுக்கு உண்மையில் பிரச்சினைகள் உண்டு தான்; அவர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்; என்று எதிர்த்தரப்பில் அமர்ந்திருக்கும் போது கூறும் கட்சி—

ஆட்சி ஆசனத்தில் ஏறியதும் சொன்னதற்கு நேர்மாறாக நடந்து கொள்வதும் ஓர் ''ஒழுங்காக'' வந்து விட்டது.

இந்த 'ஒழுங்கு' தவறானது. அது உடைக்கப்பட வேண்டும்; மாற்றப்பட வேண்டும் என்பதில் சமாதான விரும்பிகள் எவருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

அந்த மாற்றத்தைச் செய்வதற்கு—தேசியப் பிரச்சினையில் இரு தரப்புகளும் அரசியல் லாபத்தைத் துறந்து, ஒற்றுமையுடன் செயலாற்றுவது தான் உரிய ஒழுங்கு என்று எடுத்துச் செல்வதற்கு — இரண்டு தரப்புகள் மீதும் அழுத்தம் அவசியமே.

இதனைச் செய்வதில் சிங்கள — தமிழ் சக்திகள் இணைந்து செயலாற்றுவது உகந்த பலனைத் தரும் என்பது உண்மைதான்.

ஆயினும் சிங்கள மக்களிடையே உள்ள புத்திஜீவிகளுக்கு இதில் அதிக பங்கு உண்டு. இப்போதைய நிலையில் அது விசேடமாகப் பொருந்தும்.

பிரதான உரிமை எதுவாக இருக்கவேண்டும்; தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்பதில் தமிழர் தரப்பிலும் ஒற்றுமை இல்லை என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய
எம்.பிக்கள் குழு சுவிஸ் பயணம்

ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் அரசமைப்பு, அந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு, உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகமுறை ஆகியன பற்றி ஆராய இலங்கையில் இருந்து குழு ஒன்று நேற்று சுவிட்ஸர்லாந்துக்குப் பயணமாகியது.

கடற்றொழில், நீரியல் துறை அமைச்சர் இந்திகா குணவர்த்தனா தலைமையில் சென்றுள்ள இந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் பி.பி. தேவராஜ், ராவூப்கக்கீம் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

சுவிட்ஸர்லாந்தின் கியுடெக்ஸ் பல்கலைக்கழகம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கில் 6 நாள்களும்—

ஜேர்மனியில் எஸ். என். எம். நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கில் 5 நாள்களும் —

இவர்கள் பங்குபற்றி விவரங்களைப் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

மண்ணெண்ணெய் இல்லை; விநியோகம் நிறுத்தம்

சாவகச்சேரி, செப். 16

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தால் மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கையிருப்பில் இருந்த மண்ணெண்ணெய் முடிவடைந்ததே இதற்கு காரணமென எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் தெரிவித்தார்.

எனினும் மண்ணெண்ணெய் இரண்டொரு தினங்களில் சங்கத்திற்கு வந்து சேருமெனவும் —

வந்து சேர்ந்ததும் எரிபொருள் வழமை போல விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனியார் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்படாமல் இருக்க, தனியார் பஸ்களுக்கு சேவையில் ஈடுபடும் ஒழுங்கில் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் உழவு இயந்திரங்களுக்கு உரிய டீசல் வழங்கப்பட்டுவருகிறது (இ-31)

சந்திரிகாவை கோபமூட்டிய ரணிலின் கேள்வி ஒன்று!

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் கருத்து ஒன்று ஜனாதிபதி சந்திரிகாவை ஆத்திரமடையச் செய்து விட்டது.

அரசாங்கத்தின் அரசியல் யோசனைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அறியாமல் ஆளுங்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சுவார்த்தை நடத்துவதில் பலனில்லை என்று ரணில் கூறியிருந்தார்.

இதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயற் குழுக்கூட்டத்தில் சந்திரிகா காட்டமாகப்பதிலளித்தார்.

அரசு விடுதலைப்புலிகளுடன் பேசலாம்; பேசாது விடலாம். அதற்காக எதிர்க்கட்சி தமது நிலைப்பாட்டை மூடிமறைத்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. எதிர்க்கட்சி தமது நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என்று சந்திரிகா அங்கு பேசினார்.

தமது அரசியல் நிலைப்பாட்டைத் தெரிவிக்காமல் எதிர்க்கட்சி சந்தர்ப்பவாத அரசியல் நடத்துவதாகவும் அவர் கண்டித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயற் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு அமைச்சர் ஜி. எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

சுகவீனத்தைக் காரணமாகக்காட்டி ஸ்ரீமணி அக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இம் முன்னணியின் எம்.பிக்களான ரவி கருணாநாயக்காவும், கேசரலால் குணசேகராவுமே கலந்து கொண்டனர்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட அரசின் அரசியல் தீர்வு யோசனை குறித்து ஸ்ரீமணிக்கு பிடிப்பில்லை ஒற்றையாட்சி முறையே வேண்டும் என்று ஸ்ரீமானி ஒற்றைக் காலில் பிடிவாதமாக நிற்கிறார்.

சந்திரிகாவுக்கு இதனால் ஸ்ரீமணி மீது சொல்ல முடியாத ஆத்திரம்.

கடந்த பொ. ஐ. மு. செயற்குழுக் கூட்டத்தில் சந்திரிகா வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறிவிட்டார். ''அரசியல் தீர்வு யோசனை பற்றி காரணங்களைக் கூறிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அரசின் கொள்கையை ஏற்று நடக்கத் தயாராக இருக்க வேண்டும்''— இப்படி சந்திரிகா ஸ்ரீமணி கட்சியின் எம். பிக்களிடம் நேராகக் கூறிவிட்டார். ஸ்ரீமணிக்குக் கூறியது மாதிரி இது அமைந்துவிட்டது.

''நாம் லங்கா சமசமாஜக் கட்சி போன்றில்லாது எப்போதும் அரசுக்கு ஆதரவாகவே நாடாளுமன்றத்தில் வாக்களித்து வந்துள்ளோம். அரசின் குறைபாடுகள் பற்றி நாம் கூறும் போது எம்மை ஏன் மாற்றாந்தாய் பிள்ளை மாதிரி நடத்துகின்றீர்கள்'' என்று ஸ்ரீமணிக் கட்சி எம்.பிக்கள் இருவரும் கேட்டனர்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசாங்கக் கொள்கைகள் பற்றி எங்கும் எவரும் விவாதிக்க முடியாது என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

ஸ்ரீமணிக் கட்சிபின் எம்பியான ரவி கருணாநாயக்கா: ''அரசியலில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் அரசியல் தீர்வுத் திட்டம் இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே இக் கட்சிகளுக்கு அரசியல் தீர்வுத் திட்ட யோசனைகள் குறித்து சொந்தமாக முடிவெடுக்கும் உரிமை உண்டு'' — என்று கூறினார்

இவ்வாறு அடிக்கு அடியாக — மோதலின் இறுதிக் கட்டத்தில் சந்திரிகா — ஸ்ரீமணி அரசியல் உறவு போய்க் கொண்டிருக்கிறது.★

கொழும்பு மடல்

அப்போது தான் ரணில், அரசின் அரசியல் யோசனை குறித்து விடுதலைப்புலிகளின் கருத்தை அறியாது அரசும் ஐக்கிய தேசியக்கட்சியும் பேசி என்ன பயன்? என்று அமைச்சர் பீரிஸிடம் கேட்டிருந்தார்.

இது ஒரு புறமிருக்க —

சந்திரிகாவுடனான ஸ்ரீமணியின் அரசியல் உறவு மிக மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொ. ஐ. மு. செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா, ஜனநாயக ஐக்கிய தேசிய (லலித்) முன்னணியின் இரண்டு எம்.பிக்களையும் வைத்துக் கொண்டு ஸ்ரீமணியின் தலைமைத்துவம் பற்றி கடுமையாக விமர்சித்தார்.

கிழக்கில் தபாற் குண்டுகள்

கொழும்பு, செப். 16

மட்டக்களப்பில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலகத்துக்கு விலாசமிடப்பட்ட தபால் பொதியொன்றினுள் இருந்ததாகக் கூறப்படும் குண்டொன்றைச் செயல் இழக்கச் செய்த இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இதேசமயம்—

கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை தபாலகத்தில் கடிதங்களைத் தரம் பிரித்துக் கொண்டிருந்தபோது தபாற் குண்டு ஒன்று வெடித்ததால் தரம்பிரிக்கும் ஊழியர் ஒருவர் காயமடைந்தார். அவர் கல்முனை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

(உ)

படம் பிடித்தல்

சுன்னாகம் கிழக்கு, தெற்கு, வடக்கு, மத்தி ஆகிய 4 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான படம் பிடிக்கும் பணி இன்று காலை 9 மணி முதல் சுன்னாகம் சந்தைப் பகுதியில் நடைபெற விருக்கிறது. (உ-3)

நிர்வாக சேவைப் பரீட்சை

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் முதலாம் பாகம் 1995 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இப் பரீட்சையின் இரண்டாம் பாகமும், இரத்துச் செய்யப்பட்ட இரகித்தல் வினாத்தாளின் மீள் பரீட்சையும் 1996 செப்ரெம்பர் 20 முதல் ஒக்ரோபர் 03 வரை கொழும்பில் நடைபெறவுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல் கடிதம் பரீட்சைக்குத் தோற்றுவோரில் சிலருக்கு மட்டுமே கிடைத்துள்ளது. சிலருக்குக் கிடைக்கவில்லை, ஆனால் அனுமதி அட்டை ஒருவருக்குமே கிடைக்கவில்லை. அதனைக் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்தில் வைத்துப் பெறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே தற்போது பரீட்சார்த்திகள் பலர் தமது கொழும்புப் பயணத்திற்கான காரணத்தை ஆவண ரீதியாக நிரூபிக்க முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. யாழ். நகரிலுள்ள சிவில் விவகார அலுவலகத்தில் தமது பயணத்திற்கான அனுமதியைக் கோருவதில் கஷ்ட நிலையை எதிர் கொள்கின்றனர்.

அதே சமயம் அறிவித்தல் கடிதம் கிடைக்காத ஒரு சில பரீட்சார்த்திகள் எப்படியோ கொழும்பு சென்றுள்ளனர்.

இவ்வாறு ஒரு சாரார் பரீட்சைக்குத் தோற்றி, இன்னொரு சாரார் தோற்ற முடியாமல் போகும் நிலை மிகவும் மனவேதனைக்குரிய ஒன்று. அதாவது ஒரு சாராரின் சந்தர்ப்பத்தை மறுப்பதாகவே இது அமையும்.

எனவே இந்நிலையைப் புரிந்து உரிய அதிகாரிகள் தகுந்த பரிகார நிலையை உடன் செய்யுமாறு பாதிக்கப்பட்டவுள்ள பரீட்சார்த்திகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வே. தபேந்திரன்

பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

வன்னி மாணவர்களின் நிலை

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விரிவுரைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதையிட்டு ஒருபுறம் மகிழ்வடைகின்றோம். எனினும் இதயத்தின் ஒரு மூலை வலிப்பதை மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களும், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுமான எமது சகோதரர்களின் நிலை கேள்விக்குறியாக உள்ள நிலையில், எமக்கு உடனடியாக விரிவுரைகள் அவசியமா என்று மனம் கேட்கிறது.

ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதி முறைகளால் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களில் தற்போது அரைப்பங்கினரே யாழ்ப்பாணத்தில் உள்ளனர். இவர்களிலும் விஞ்ஞான பீடத்தைப் பொறுத்தவரை ஆங்கில, தமிழ் மொழி மூலம் விரிவுரைகள் பிரிக்கப்படும் போது ஒரு சில மாணவர்களே ஒரு பிரிவுக்குச் சேருவர்.

இதைவிட இரண்டொரு மாதங்களில் வரப்போகும் வன்னி மாணவர்களுக்காக மீண்டும் இரு பிரிவுகளை ஆரம்பிக்க நேரிடும். இவ்வாறு ஒரே விரிவுரையை குறைந்த எண்ணிக்கை மாணவர்களுக்கு நான்கு தடவைகள் மீள நடத்த வேண்டி வரலாம் அல்லவா?

மேலும் புதிதாக முதலாம் ஆண்டிற்கு வரும் மாணவர்களை விட தற்போது முதல் அரையாண்டை நிறைவு செய்து பரீட்சைக்கு தோற்றமுடியாதுள்ள வன்னி மாணவர்கள் தங்கள் கல்வியில் பின்தங்கி விடுவார்கள். இதனை நிர்வாகத்தினர் மனதிற் கொள்ளக் கூடாதா?

இச்சிரமங்களை கருத்திற் கொண்டு வன்னியில் சிக்குண்ட மாணவர்களை விரைவிலேயே இங்கு வரச்செய்து அவர்களுக்குரிய பரீட்சைகளை முடித்தபின் அனைவருக்கும் ஒன்றாக விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதே உகந்தது.

இது குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தினர் ஆராய அமர்ந்து மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று வன்னியில் உள்ள எமது சகோதர மாணவர்கள் சார்பில் மிகவும் விநயமாக வேண்டுகிறோம். வன்னியில் உள்ள மாணவர்கள் இங்கு விரைவில் வந்து சேர்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி ஆக்கபூர்வமாகச் செய்வதன் மூலம் பல்கலைக்கழகம் முழு அளவில் இயங்க வழி பிறக்கும் என்று நம்புகிறோம்.

''கிருஷ்ணா''

(2 ஆம் வருட மாணவர்கள் சார்பாக)

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளத்தில் தேடுதல் 35 தமிழ் இளைஞர் கைது

கடந்த புதன்கிழமை புத்தளம், சிலாபம் பகுதிகளைச் சுற்றிவளைத்த பொலீஸார் அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று சோதனை நடத்தினர்.

புத்தளம், சிலாபம், சஜீவ புரம், கொச்சிமடு, அநுராத புரம் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களின் வீடுகளும் பொலீஸாரின் சோதனைக்குட்படுத்தப் பட்டன.

இச் சோதனையின்போது 35 தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். (இ-3)

பாதுகாப்புக் கோரும் பொலன்னறுவ மக்கள்

மட்டக்களப்பு, செப். 16

பொலன்னறுவ மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான சுங்காவில், குடாப்பொக்குண போன்ற கிராமங்களுக்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் உள்ளதால் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாங்கள் பெரும் அச்சத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருவதாக சுங்காவில் பகுதி முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸிடம் முறையிட்டுள்ளனர்.

சுங்காவில் பொலீஸ் காவல் நிலையம் விடுதலைப் புலிகளால் கடந்த வாரம் தாக்கப் பட்ட போது தாம் அல்லோல கல்லோலப்பட்டு உயிரைப் பாதுகாக்க அங்குமிங்கும் ஓடி ஒழித்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்குள்ள பொலீஸ் நிலையத்தைப் பலப்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்குப் பலன் கிடைக்கவில்லை என்றும் —

அங்குள்ள ஒரு சில பொலீஸாரை நம்பி நாம் வாழ முடியாது என்றும் —

அதிரடிப்படை அல்லது இராணுவம் அங்கு நிறுத்தப்பட வேண்டும் என்றும் —

அவர்கள் கோரியுள்ளனர். (உ-3)

உல்லாசப் பயணிகளின் வருகை 30 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, செப். 16

இவ்வருட முதல் ஏழு மாதத்திலும் உல்லாசப்பயணிகளின் வருகை 30 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம் முதல் ஏழு மாதத்திலும் ஓர் இலட்சத்து 70 ஆயிரத்து 28 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 490 உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். (உ-3)

ஊர்காவற்படையில் சேர இளைஞர் பின்னடிப்பு!

ஊர்காவற்படையில் சேர்வதற்கு இளைஞர்கள் பின்னடிப்பதாக அரசு சார்பு கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

கடமையில் இருக்கும்போது ஊர்காவற்படையினர் இறந்தால் அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படுவதில்லை என்றும்—

இதனால் இளைஞர்கள் ஊர்காவற்படையில் சேர பின்னடிப்பதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

எல்லைப்புறக் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் ஊர்காவற் படையினர் இறந்தால் நாட்டுக்காகத் தம்மைத் தியாகம் செய்த அவர்களுக்காக உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று பொலன்னறுவ மாவட்ட எல்லைக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-3)

மரண அறிவித்தல்

திருமதி சிவபாக்கியம் பரமநாதன்
(தேவி)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா முதலாம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் பரமநாதன் 04-09-96 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் பரமநாதன் அதிபர், வவுனியா பண்டாரிகுளம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், பார்த்தீபன் (லண்டன்), கவிதா, காண்டீபன், நந்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி V S கந்தையா அவர்களின் அன்பு மகளும், திருமதி கனகம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:

திருமதி பரிமளம் கனகசுந்தரம்
(பரமநாதனின் சகோதரி)

உசன்,
மிருசுவில். (47323)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2021 இல் அச்சுக்கூடத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 16-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கொழும்பு செல்லும் நோயாளர்

யாழ்ப்பாணம், செப் 16

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்காக யாழ் வைத்தியசாலையில் பதிவு செய்துள்ள நோயாளர்களில் 11 பேர் நாளை மறுதினம் புதன்கிழமை கப்பல் மூலம் செல்வதற்கு ஏற்பாடாகி உள்ளது.

நோயாளர்களையும் அவர்களது உதவியாளர்களையும் அன்று காலை 7 மணிக்கு வைத்தியசாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

நோயாளர்கள்: குமாரவேலு கிருஷ்ணராஜா, பொன்னையா கதிர்காமர், திருமதி கமலாதேவி வல்லிபுரம், செல்லையா கந்தசாமி, திருமதி பூரணம் கார்த்தி, செல்வி கவிதா சிவலிங்கம், திருமதி செல்லம்மா சின்னத்தம்பி, சின்னத்தம்பி சிவஞானம், செல்வி கோதமி கனகரத்தினம், மாணிக்கம் செல்வலிங்கம், திருமதி மகேஸ்வரி வேலாயுதம்.

உதவியாளர்கள்:

தம்பன் குமாரவேலு, திருமதி சபாரட்ணம் இராஜலட்சுமி, திருமதி கிரிஜாம்பாள் கனகரட்ணம், பி. லோகநாதன். (உ-3)

மருந்து இல்லாது நோயாளர் அவதி

தென்மராட்சி, செப் 16

கொடிகாமம் மிருசுவில் மத்திய மருந்தகத்தில் 'அன்ரிபயடிக்' மருந்துகள் இல்லாத காரணத்தால் இம் மருந்துகளை வாங்கப் பொதுமக்கள் ஏழு மைல்களுக்கு அப்பால் உள்ள சாவகச்சேரி தனியார் டிஸ்பென்சரிகளுக்கு வருகின்றனர்.

கொட்றிம், பென்சிலின், அமக்சோசிலின் போன்ற ''அன்ரிபயடிக்'' மருந்துகள் மருந்தகத்தில் இல்லாததால் இவற்றை வெளிக் கடைகளில் வாங்கிப் பாவிக்குமாறு டாக்டர்கள் பணிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-117)

சுப்பிரமணிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்ற ஜெயலலிதா முயற்சித்த போது, அதனை அம்பலப்படுத்தி தடுப்பதற்கு சந்திரலேகா முயன்றார் என்றும் -

அதனால் சீற்றமுற்ற ஜெயலலிதாவே ஆட்களை வைத்து சந்திரலேகா மீது திராவகம் வீச வைத்தார் என்றும் —

சந்திரலேகா தரப்பில் குற்றஞ் சுமத்தப்பட்டு வருகின்றது.

ஜெயலலிதாவைத் தமது பரம வைரியாகவே சந்திரலேகா பொதுக் கூட்டங்களில் பேசி வருகின்றார்.

அந்தச் சந்திரலேகாவுக்கு ஆதரவாகவே —

தனது ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று சங்கணம் கட்டி செயற்பட்டு வந்த சுப்பிரமணிய சுவாமியின் கட்சிக்கு ஆதரவாகவே—

தற்போது தனது கட்சி வேட்பாளரை ஜெயலலிதா போட்டியிலிருந்து விலக்கியிருக்கின்றார்.

''இந்தத் தேர்தலில் அதிமு.கவுக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்பது ஜெயலலிதாவுக்கு நன்கு தெரியும். அத்தோடு தனது தற்போதைய முதலாவது வைரியான கருணாநிதி தமது மகனைக் களத்தில் இறக்கியிருக்கும் தேர்தலில் அவரை மண்கவ்வச் செய்வதற்கு ஜெயலலிதாவுக்கு உள்ள ஒரேவழி இதுதான். அத்துடன் கருணாநிதி வாரிசு அரசியல் நடத்துகின்றார் எனப் பிரகடனப்படுத்துவதற்கும் தனது இந்த ''ஸ்டண்ட்'' உதவும் என்று ஜெயலலிதா கருதுகின்றார்.'' இவ்வாறு விமர்சகர்கள் தெரிவித்தனர். (உ-3)

தபால் தினைக்களத்தின் நேர்முகப் பரீட்சைகள்

அனேகமாக மாத இறுதியில்!

குடா நாட்டில் ஒன்றிணைந்த தபால் சேவையில் உள்ள 50 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக தபால் தினைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட சமயம் சுமார் 3 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்ததாகவும் —

இந்த விண்ணப்பிபங்களில் தகைமை ஆராயப்பட்டு தெரிவான 2 ஆயிரத்து 400 விண்ணப்பங்கள் ஒரிரு தினங்களில் தபால் மா அதிபருக்கு அனுப்பப்படவிருப்பதாகவும்—

நேர்முகப் பரீட்சை நடத்தும் குழு பற்றிய விவரங்கள் அவரிடம் இருந்து கிடைத்ததும் மாத இறுதியில் நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும்—

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பெரும்பாலும் நவம்பர் மாதத்தில் நியமனங்கள் வழங்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

ஒரு மாதத்துக்குரிய நிவாரணம் இவ்வாரத்தில்!

உ. அ. அதிபர்களூடாக இம்முறை

யாழ்ப்பாணம், செப். 16

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்துக்குரிய உலர் உணவு விநியோகம் முதல் முறையாக பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஊடாக இவ்வாரம் வழங்கப்படவுள்ளது.

நிவாரண உலர் உணவு விநியோகப்பணியைச் செய்யும் பொறுப்பு கடந்த வாரம் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு பண்முகப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோரிடம் உள்ள இரு முத்திரைகளுக்கும் ஒகஸ்ட் 15 முதல் செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரையான ஒரு மாத கால நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான பொருள்களை ப.நோ.கூ.சங்கங்களுக்கு பிரதேச செயலகங்களும், உதவி அரச அதிபர் அலுவலகங்களும் அவ்வப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கியுள்ளன. அரிசி, மா, சீனி, பருப்பு ஆகியவற்றுடன் 2 அங்கத்தவர்களுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு ரவையும், இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடைய குடும்பங்களுக்கு லக்ஸ்பிறே பால்மாவும் வழங்கப்படவிருக்கின்றன. (அ-3)

கிழக்கு பல்கலையில் மோசமான 'ராகிங்'!

மட்டக்களப்பு, செப். 16

''ராகிங்'' என்ற போர்வையில் கிழக்கு பல்கலைக்கழக புதிய மாணவர்கள்ப் கடுமையான துன்புறுத்தல்களுக்குள்ளாவதாக பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்துக்கு புதிய மாணவர்கள் கடந்த 2 ஆம் திகதி அனுமதி பெற்றதில் இருந்து இத்தகைய துன்புறுத்தல்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப் படுகிறது.

''ராகிங்'' என்ற பகிடிவதைக்கு கட்டுப்படாத புதிய மாணவர்கள் மீது பழைய மாணவர்கள் தடியடிப் பிரயோகம் செய்வதாகவும் கூறப்பட்டது.

சிரேஷ்ட மாணவர்களின் தாக்குதல், சித்திரவதையால் பல மாணவர்கள் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பற்சிகிச்சைப் பிரிவில் 3 டாக்டர்கள் மட்டுமே

யாழ்ப்பாணம், செப். 16

யாழ் போதனா வைத்திய சாலை பற் கிளினிக்கில் கடமைபுரியும் டாக்டர்களின் பற்றாக்குறை காரணமாக டாக்டர்களும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த காலத்தில் ஏழு டாக்டர்களுக்கு மேல் பற் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வந்தனர். நோயாளரும் சராசரி நாளொன்றுக்கு 50 பேருக்கு குறையாமல் சிகிச்சை பெற்றனர்.

தற்போது மூன்று டாக்டர்கள் மாத்திரமே கடமையில் இருக்கின்றனர். எனினும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்தும், டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பதால் நோயாளரைப் பார்வையிடுவதில் பெரும் சிரமங்களும் தாமதங்களும் ஏற்படுகின்றன.

நண்பகலுடன் முடிவடையும் சிகிச்சையை நோயாளர் அதிகரிப்பால் பிற்பகல் 2 மணிவரை தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளதாகவும் —

நோயாளரின் நலன்கருதி டாக்டர்கள் தமது சிரமங்களைப் பொருட்படுத்தாது இச்சேவையை தினமும் தொடர்வதாகவும், பற்சிகிச்சைப் பிரிவில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

சின்ன வெங்காயம் விமானம் மூலம்

யாழ் குடா நாட்டில் பயிரிடப்பட்ட சின்ன வெங்காயத்தை விமானமூலம்கொழும்புக்குக் கொண்டு வருவது குறித்து பாதுகாப்புப் படையினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக கூ.மொ.வி. நிறுவன தலைவர் பீற்றர் ஜயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 2 ஆயிரம் மெற்றிக் தொன் சின்ன வெங்காயத்தைக் கொழும்புக்கு அனுப்ப யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துவருவது தெரிந்ததே. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org